கரும்பாக்கம் ஊராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்
திருப்போரூர் ஒன்றியம்

**கரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை - திரு.த.தனசேகரன்(பொ)**

ந.க.எண்.02/2024/ஊ.செ நாள்.28.06.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - **கரும்பாக்கம்** ஊராட்சி மற்றும் ராயல்பட்டு கிராமம் திரு.**T.அழகேசன்** மற்றும் **V.கன்னியப்பன்** என்பவரின் சர்வே எண்கள்.80/1A,1C &1D-ல் 2950ச.மீ (0.73ஏக்கர்)பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - திட்ட அனுமதி அளித்து உத்திரவிடுதல் - சார்ந்து

பார்வை:
1. Joint Director / Deputy Director / Assistant Director, Town and Country Planning Department (Planning Permission) ROC No. GKBWSYAI Dated 16.02.2023
2. தானப்பத்திர எண் 1977/2023 நாள் 30.01.2023
3. கரும்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்-08 நாள் 20.06.2024
4. பலவகை வரவு ரசீது எண் -1 நாள் 27.06.2024

****

**உத்திரவு**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் **கரும்பாக்கம்** ஊராட்சி மற்றும் ராயல்பட்டு கிராமம் திரு.**T.அழகேசன்** மற்றும் V.கன்னியப்பன் என்பவரின் சர்வே எண்கள்.80/1A,1C &1D-ல் 2950ச.மீ (0.73ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேசி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1-ல் Joint Director / Deputy Director / Assistant Director, Town and Country Planning Department (Planning Permission) செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகளின்படி, **MLPA(CD) No.37/2023** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை - 2ல் காணும் தானப்பத்திரத்தின்படி, சாலை (392 ச.மீ) பொது உபயோகம் (19 ச.மீ) மற்றும் TNEB (20.00 ச.மீ) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் காணும் ஊராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையிலும், வளர்ச்சி கட்டணம் ரூ.271800/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) ஊராட்சிக்கு வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டதின் அடிப்படையிலும், கீழ்காணும் நிபந்தனைக்களுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1)நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதல் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விணணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2.மேற்படி மனைப்பிரிவில் தானப்பத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3)சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

4)மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தபட வேண்டும்.

5)இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைதடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையினை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர் (பொறுப்பு)
கரும்பாக்கம் ஊராட்சி.

தலைவர் (பொ)
கரும்பாக்கம் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

**Mr. T.Azhakesan & V.Kanniyappan**
**No.19 Aravind Nagar,**
**Venkadamangalam, Ponmar**
**Vandalur Taluk**
**Chengalpattu – 600 048**